செ.கு. எண் : 371 நாள் : 19.10.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 19.10.2012

18.10.2012 அன்று கோயம்புத்தூரிலிருந்து பொன்னமராவதி சென்று கொண்டிருந்த அரசு பேருந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், வையம்பட்டி பகுதி, பொன்னம்பட்டி காலனி அருகில் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில், பொன்னமராவதியைச் சேர்ந்த பேருந்து நடத்துநர் திரு. சிதம்பரம், பேருந்தில் பயணம் செய்த கோயம்புத்தூர் மாவட்டம், கோகுலம் காலனியைச் சேர்ந்த திரு. பெரியகருப்பன் என்பவரின் மனைவி திருமதி ராஜீ ஆகியோர் சம்பவ இடத்திலேயும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம், பரளியைச் சேர்ந்த திரு. மருதை என்பவரின் மகன் திரு. பொன்னுசாமி பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றியும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்த திரு. சிதம்பரம், திருமதி ராஜீ மற்றும் திரு. பொன்னுசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் பேருந்தில் பயணம் செய்த ஏழு நபர்கள் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த பேருந்து நடத்துநர் திரு. சிதம்பரம், திருமதி ராஜீ மற்றும் திரு. பொன்னுசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

2/2